## சுருக்கம்

கல்லூரிக் கல்வி – சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி – மதுரை மாவட்டம், Service and Education for Village Awareness and improvement Society (Sevai Society)- சார்பில் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், தே.சிந்தலைச்சேரி கிராமம் என்னுமிடத்தில் மதர் தெரசா கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி என்கிற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை 2018–19–ஆம் கல்வியாண்டு முதல் துவங்குவதற்கு அனுமதியளித்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

### உயர்கல்வித் (இ1) துறை

அரசாணை (நிலை) எண்.211

நாள்.4.9.2018,
விளம்பி, ஆவணி 19,
திருவள்ளுவர் ஆண்டு, 2049.

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.356, உயர்கல்வித் (இ1) துறை, நாள்: 29.9.2009.
2. அரசாணை (நிலை) எண்.4, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.7.1.2011.
3. அரசு கடிதம் எண்.17861/இ1/2011–1, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.16.9.2011.
4. அரசாணை (நிலை) எண்.40, உயர்கல்வித் (இ1) துறை, நாள். 28.02.2014.
5. அரசாணை (நிலை) எண்கள். 107, 108 மற்றும் 109, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.14.5.2015.
6. மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் ஆய்வறிக்கை ந.க.எண்.6078/அ1/2015, நாள்.28.9.2015.
7. தேனி, மாவட்ட வருவாய் அலுவலரின் ஆய்வறிக்கை ந.க. எண்.15462/15/டி/நி.சீர், நாள்.17.8.2017.
8. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.39991/ஆர்2/2014, நாள்.22.11.2017 மற்றும் 14.5.2018.

**** *** ****

ஆணை :–

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், தே.சிந்தலைச்சேரி கிராமம் என்னுமிடத்தில் "மதர் தெரசா கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி" என்ற பெயரில் அரசு நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை 2018–19–ஆம் கல்வியாண்டில் தொடங்க, மதுரை மாவட்டம், Service and Education for Village Awareness and improvement Society (Sevai Society)- சார்பில் விண்ணப்பம் பெறப்பட்டு, மதுரை, மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் மற்றும் தேனி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரின் ஆய்வறிக்கை மற்றும் பரிந்துரை பெறப்பட்டது எனவும், இக்கல்வி முகமை பின்வருவனவற்றை நிறைவு செய்துள்ளதாகவும், மேலே எட்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார்:–

1) கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் கல்வி முகமையின் பெயரில் கூட்டாக ரூ.20,00,000/– (ரூபாய் இருபது லட்சம்) வைப்புத்தொகை தமிழ்நாடு மின்விசை போக்குவரத்து வளர்ச்சி நிதி கழகத்தின் இரசீது எண். RAA 327181, நாள்.5.05.2017–இல் முதலீடு செய்யப்பட்டுள்ளது.